

தமிழ்நாடு துணை முதலமைச்சர் , கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டை மத்திய ஒன்றியம், பூலாங்கிணரில் 2ம் ஆண்டு நடைபெற்ற மாபெரும் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு தொகை மற்றும் கோப்பைகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல. பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், மத்திய ஒன்றிய செயலாளர் க.செந்தில்குமார், உடுமலை நகர்மன்ற தலைவர் எம்.மத்தீன் உள்பட மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கி மேற்கு ஒன்றிய திமுக சார்பில் எரிச்சி சிதம்பர விடுதியில் நடைபெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் வழங்கினார்கள். நிகழ்வுகளில் தலைமைக் கழக பேச்சாளர்கள் கரூர் முரளி, சுமித்ரா, சரண்யா, ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், ஒன்றிய கழக செயலாளர்கள் எல்.குமார் (எ) துரைக் கண்ணு, கே.எஸ்.ரவி, மாவட்ட கவுன்சிலர் சரிதா மேகராஜன், கீரமங்கலம் பேரூர் செயலாளர் கே.சி.சிவக்குமார், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பாத்திமா பீவி, ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆதி. கருணாநிதி, மெ.மூர்த்தி, மெ.ரவிச்சந்திரன், இரா. நிறைவு அண்ணா, வாசுகி அன்பரசு, ச.பாலு மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### தஞ்சை தொகுதியில்

# தேசிய அளவிலான திட்டங்களை செயல்படுத்த ஒன்றிய அரசு முன்மொழிந்துள்ளதா?

## நாடாளுமன்ற மக்களவையில் ச.முரசொலி எம்.பி. கேள்வி!



தஞ்சாவூர் . டிச. 10 - தஞ்சை தொகுதியில் தேசிய அளவிலான திட்டங்களை செயல்படுத்த ஒன்றிய அரசு முன்மொழிந்துள்ளதா? என நாடாளுமன்றத்தில் ச.முரசொலி எம்.பி. கேட்ட கேள்விக்கு மத்திய மந்திரி பதில் அளித்துள்ளார்.

நாடாளுமன்ற குளிர் கால கூட்டத்தின் போது கேள்வி நேரத்தில் ச.முரசொலி எம்.பி. பேசினார். அப்போது ஒன்றிய அரசின் மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திட்டத்தின் நிலை என்ன?தஞ்சை நாடாளுமன்ற தொகுதியில் தேசிய அளவிலான திட்டங்களை செயல்படுத்த ஒன்றிய அரசு ஏதேனும் முன்மொழிந்து ள்ளதா? இல்லையெனில் அதற்கான காரணங்கள் என்ன? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அறிவியல், தொழில்நுட்ப மற்றும் புவி அறிவியல் துறை துணை மந்திரி ஜிதேந்திர சிங் பதில் அளித்து கூறுகையில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப திட்டம் செயல்படுகிறது.அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்கான சூழலை மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கம். இதற்கான நிதி உதவியும் வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் ஆறுவிதமான நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் மாவட்டவாரியாக நிதி ஒதுக் கீடு செய்யப்படுவதில்லை. கடந்த 3 ஆண்டுகளில் தமிழ் நாட்டிற்கு ரூ.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தஞ்சை தொகுதியில் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்திற்கு மட்டும் ரூ.6 கோடியே 58 லட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரிக்கு ரூ.30.17 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. சிறுதானியங்கள் குறித்து ஆராய்ச்சி செய்வதற்காகதஞ்சையில் உள்ள தேசிய உணவு தொழில் நுட்பயியல், தொழில் முனைவு மற்றும் மேலாண்மை நிறுவனத்திற்கு ரூ.86.95 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தேசிய அறிவியல் தினம் மற்றும் தேசிய கணித தினம் கொண்டாடுவதற்காகநிதி வழங்கப்படுகிறது.

பயோடெக்னாலஜி துறையி ல்எட்டுகோடியே 96 லட்சம் மதிப்பில் திட்டங்களுக்கு நிதியளிக்கப் பட்டுள்ளது. பான்செக்கர்ஸ் மகளிர் கல்லூரி மற்றும் புஷ்பம் கல்லூரி (தன்னாட்சி) ஆகிய கல்லூரிகளுக்கும் ரூ.2 கோடியே 49 லட்சமும்வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

### பகுதிச் செயலாளர் மா.நாகராஜ் தலைமையில்

# கோவை பீளமேடு பகுதி 2 -ல் இலவச கண்சிகிச்சை முகாம்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தொடங்கி வைத்தார்!

கோவை, டிச. 10 - கோவை மாநகர் மாவட்டம், பீளமேடு பகுதி2 திமுக சார்பில், கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர், கோவை மாவட்டப் பொறுப்பு அமைச்சர், வி. செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின்படி, ஆவாரம் பாளையம் ஷோபா நகர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாமை, கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் தொடங்கி வைத்தார்.

பீளமேடு பகுதி2 செயலாளர் மா.நாகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் ஆர்.மணிகண்டன், மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் இரா.தனபால்,

28 வது வட்டக்கழக செயலாளர் ப.மோகன் ராஜ், பகுதி பொருளாளர் ஆ. வை.ஆர். சதீஷ்குமார், பகுதி துணை செயலாளர் இ.ரா.நாகராஜ், மாவட்டப் பிரதிநிதி கேபிள்சேகர், வட்டக் கழக துணைச் செயலாளர் நாராயணசாமி, செல்லப்பா, வட்டப் பிரதிநிதிகள் எஸ்.டி.எஸ். சரவணன், கந்தசாமி, பிரகாஷ், ஆர்.கே.பாலு,சம்பத், இளைஞரணி பிரகாஷ், சுரேஷ், ராமமூர்த்தி ரங்கநாதன், குமரேசன், ஈஸ்வரன், வெங்கடபதி, சக்திவேல், செல்வேந்திரன், பழனிச்சாமி, ஸ்ரீ கோனியம்மன் திருக்கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் வி.லட்சுமணன், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஆர்.எஸ்.பாண்டியன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

# திருத்துறைப்பூண்டி நகர தி.மு.க. சார்பில் கராத்தே - சிலம்பம் விளையாட்டுப் போட்டிகள்!

## ஏ.கே.எஸ்.விஜயன் துவக்கி வைத்து பரிசுகளை வழங்கினார்!

திருவாரூர், டிச. 10 - திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகர தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நகரச் செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆர்.எஸ்.பாண்டியன் ஏற்பாட்டில் பிரமாண்ட கராத்தே மற்றும் சிலம்பம் விளை யாட்டுப் போட்டிகள் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் தலைமை ஏற்று போட்டிகளை துவங்கி வைத்து பரிசுகளை வழங்கினார்.

திருவாரூர் மாவட்டக் கழகக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, மாவட்டம் முழுவதும் இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வார்டு , கிளைக் கழகங்களில் எழுச்சியோடு கொண்டாடப்பட்டு வருகிறது. திருத்துறைப்பூண்டி நகர தி.மு.க. சார்பில், நகரச் செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆர்.எஸ்.பாண்டியன் ஏற்பாட்டில் பிரமாண்ட கராத்தே மற்றும் சிலம்பம் விளையாட்டுப் போட்டிகள் திருத்துறைப்பூண்டி முத்தூஸ் கராத்தே மற்றும் கோபுடோ பயிற்சி பள்ளியுடன் இணைந்து நடைபெற்றது.

மாநிலம் முழுவதிலும் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்ற இந்த பிரமாண்ட போட்டிகளை தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன் தலைமை ஏற்று துவக்கி வைத்து பரிசுகளை வழங்கினார். போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நகரச் செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன் சார்பில் உணவு மற்றும் தாங்கும் வசதிகள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்துதந்தார். பங்கேற்று போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு வெற்றி கோப்பைகளை வழங்கப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய கழகச் செயலாளர் முகில் ராஜேந்திரன், அவைத்தலைவர் வி.சிதம்பரம், நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன், மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் சிக்கந்தர், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஐ.ஜி.எஸ்.ஜாகிர் உசேன், மாவட்ட சுற்றுசூழல் அணி துணை அமைப்பாளர் ஓம்.சக்தி கண்ணன், நகர்மன்ற உறுப்பினர்கள் சக்திவேல், ரவி, செந்தில், ரமேஷ், நகர இளைஞர் அணி அமைப்பாளர் வசந்த், கமல், நகர வர்த்தகர் அணி அமைப்பாளர் பாத்திரக்கடை பாலு , நகர துணை செயலாளர் செல்லப்பா, பொருளாளர் முத்துக்குமார், மாவட்ட பிரதிநிதி பன்னீர்செல்வம், முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் ஆர்.எஸ்.சுந்தர், ஷிபான், முத்தூஸ் கராத்தே பள்ளி நிறுவுனர் முத்துக்குமார் மற்றும் நகர கழக, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணைகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர்.



கோவை மாநகர் மாவட்டம், பீளமேடு பகுதி2 திமுக சார்பில், கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர், கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சர், வி. செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின்படி, ஆவாரம் பாளையம் ஷோபா நகர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாமை, கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் தொடங்கி வைத்தார். *பீளமேடு பகுதி2 செயலாளர் மா.நாகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் ஆர்.மணிகண்டன், மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் இரா.தனபால்,*28 வது வட்டக்கழக செயலாளர் ப.மோகன் ராஜ், பகுதி பொருளாளர் ஆ. வை.ஆர். சதீஷ்குமார், பகுதி துணை செயலாளர் இ.ரா.நாகராஜ், மாவட்டப் பிரதிநிதி கேபிள்சேகர், வட்டக் கழக துணைச் செயலாளர் நாராயணசாமி, செல்லப்பா, வட்டப் பிரதிநிதிகள் எஸ்.டி.எஸ். சரவணன், கந்தசாமி, பிரகாஷ், ஆர்.கே.பாலு,சம்பத், இளைஞரணி பிரகாஷ், சுரேஷ், ராமமூர்த்தி ரங்கநாதன், குமரேசன், ஈஸ்வரன், வெங்கடபதி, சக்திவேல், செல்வேந்திரன், பழனிச்சாமி, ஸ்ரீ கோனியம்மன் திருக்கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் வி.லட்சுமணன், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகர தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நகரச் செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆர்.எஸ்.பாண்டியன் ஏற்பாட்டில் பிரமாண்ட கராத்தே மற்றும் சிலம்பம் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் தலைமை ஏற்று போட்டிகளை துவங்கி வைத்து பரிசுகளை வழங்கினார். மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### கடலூரில் ஃபெஞ்சல் புயல்

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள்!

## கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

கடலூர், டிச. 10 - கடலூரில் ஃபெஞ்சல் புயல் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆலோசனைப்படி, நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

இதில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. ஐயப்பன், டாக்டர் பிரவீன் ஐயப்பன் தலைமை தாங்கி நாணமேடு, உச்சிமேடு, குண்டு உப்பலவாடி, தாழங்குடா, கண்டக்காடு, குறிஞ்சி நகர், வெளிசெம்மண்டலம், நத்தப்பட்டு, கோண்டூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 5 ஆயிரம் குடும்பங்களுக்கு 30 லட்சம் மதிப்பிலான புடவை, அரிசி, போர்வை, கைலி மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்கி ஆறுதல் கூறினர்.

அப்போது கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆதி பெருமாள், ரவிச்சந்திரன், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், ஊராட்சி மன்றத் தலைவர்கள் சாந்தி மதியழகன், காந்தாமணி கண்ணன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் லட்சுமணன், துணைத் தலைவர் சாந்தி பழனிவேல்,

முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரவி ராஜ், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சுதாகர், நிர்வாகிகள் அண்ணாதுரை, வேணு, ரவி, ரங்கநாதன், பரத், அசோகன், சங்கர், அன்பழகன், தேவநாதன் உட்பட கழக தோழர்கள் பலர் பங்கேற்றனர்.

அப்போது கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. கூறுகையில், பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் அனைவருக்கும் தொடர்ந்து நிவாரண உதவிகள் வழங்கப்படும் என தெரிவித்தார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், தாராபுரம் சிஎஸ்ஐ பள்ளியில் உள்ள மாணவிகளுக்கு மத்திய உணவினை மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம் முன்னிலையில் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினார். இதில் நகர்மன்ற தலைவர் கு.பாப்பு கண்ணன், வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர் கே.செல்வராஜ், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் வி.கமலக்கண்ணன் உள்பட மாவட்ட, நகர கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கடலூரில் பெஞ்சல் புயல் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படி, சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், டாக்டர் பிரவீன் ஐயப்பன் தலைமை தாங்கி நாணமேடு, உச்சிமேடு, குண்டு உப்பலவாடி, தாழங்குடா, கண்டக்காடு, குறிஞ்சி நகர், வெளிசெம்மண்டலம், நத்தப்பட்டு, கோண்டூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த 5 ஆயிரம் குடும்பங்களுக்கு 30 லட்சம் மதிப்பிலான புடவை, அரிசி, போர்வை, கைலி மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்கி ஆறுதல் கூறினர். அதுபோது கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆதி பெருமாள், ரவிச்சந்திரன், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், ஊராட்சி மன்றத் தலைவர்கள் சாந்தி மதியழகன், காந்தாமணி கண்ணன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் லட்சுமணன், துணைத் தலைவர் சாந்தி பழனிவேல், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரவி ராஜ், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சுதாகர், நிர்வாகிகள் அண்ணாதுரை, வேணு, ரவி, ரங்கநாதன், பரத், அசோகன், சங்கர், அன்பழகன், தேவநாதன் உட்பட கழக தோழர்கள் பலர் உடன் இருந்தனர்.